தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 4-9-2015

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலைக்கு ஆப்பிரிக்க விரிவாக்க பயிற்சியாளர்கள் வருகை

கென்யா, லைபீரியா மற்றும் மளாவி நாடுகளைச் சேர்ந்த 39 ஆப்பிரிக்க விரிவாக்கப் பணியாளர்கள் தேசிய வேளாண் விரிவாக்க மேலாண்மை நிறுவனம் (MANAGE), ஹைதராபாத் நடத்தும் அமெரிக்க-இந்திய ஆப்பிரிக்க சர்வதேச பயிற்சியான வேளாண் விரிவாக்க மேலாண்மையில் புதிய அணுகுமுறை என்ற பயிற்சியில் பங்கேற்றுள்ளனர்.

இந்த சர்வதேச பயிற்சியானது, மூன்று நாடுகளின் ஒத்துழைப்புடன் உயர் தொழில் நுட்பங்களைப் பின்பற்றுதல் மற்றும் புதிய தீர்வுகளை கண்டறிதல் போன்றவற்றின் மூலம் ஆப்பிரிக்காவின் உணவுப் பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்வதாகும். 60 நாள் இந்தியப் பயணத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு 31.8.2015 அன்று புதிய விரிவாக்க அணுகுமுறையை பற்றி அறிய வருகை புரிந்தனர்.

முனைவர் சி.ஆர்.ஆனந்தகுமார், பல்கலைக் கழக துணைவேந்தர் அவர்கள் சிறப்புரையாற்றி பயிற்சியாளர்களிடம் கலந்துரையாடினார். முனைவர் ஹெ.பிலிப், விரிவாக்கக்கல்வி இயக்குநர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், விரிவாக்கக்கல்வி இயக்ககத்தின் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்கும் செயல்பாடுகளைப் பற்றி பயிற்சியாளர்களிடம் விளக்கிக் கூறினார். மேலும், வேளாண் அறிவியல் நிலையம், உழவர் உறுதுணை மையம், வேளாண் தகவல் தொழில்நுட்ப மையம், உழவரின் வளரும் வேளாண்மை போன்ற விவசாயத்திற்கு உதவி செய்யும் விரிவாக்க செயல்பாடுகளை எடுத்துக் கூறினார். முனைவர் ச.பழனிசாமி, பேராசிரியர் மற்றும் தலைவர், பயிற்சிப் பிரிவு, பயிற்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

பயிற்சியாளர்கள் வேளாண் அழைப்பு மையம், சமுதாய வானொலி நிலையம் மற்றும் கல்வி ஊடக மையத்திற்குச் சென்று வேளாண்மையில் மக்கள் தொடர்பு ஊடகத்தின் செயல்பாடுகள் மற்றும் பங்கினை அறிந்து கொண்டனர்.

பயிற்சியாளர்கள் சிறுதானியங்கள் மற்றும் பயறுகள் துறைகளை சென்று பார்த்தனர். முனைவர் ரவிகேசவன், பேராசிரியர் மற்றும் தலைவர், சிறுதானியங்கள் துறை தற்போதைய சிறுதானியங்கள் உற்பத்தி மேம்பாட்டு முன்னேற்றங்களை விவரித்தார். முனைவர் கண்ணன் பாபு, பேராசிரியர் மற்றும் தலைவர், பயறுகள் துறை, தமிழகத்தின் பயறு உற்பத்தி நுட்பங்கள் பற்றி விவரித்தார்.

முனைவர் ந. ஆனந்தராஜா, உதவிப் பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்), இ-விரிவாக்க மையத்தின் வேளாண்மையில் தகவல் தொழில்நுட்பம் பற்றி பயிற்சியாளர்களிடம் விவரித்தார்.

வருகையின் முடிவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலையின் விரிவாக்க செயல்பாடுகள் பற்றிய கலந்துரையாடல், கருத்துகள் மற்றும் பயிற்சி அனுபவம் மூலமாக உலகளாவிய உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதாக ஆப்பிரிக்க பயிற்சியாளர்கள் தெரிவித்தனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்







